சுருக்கம்

பாசனம் – பகுதி II திட்டங்கள் – 2010–11ஆம் ஆண்டு – மேட்டூர் கால்வாய் திட்டம் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் மேட்டூர் கிழக்குக் கரை கால்வாய் மைல் 34/5 கிளை வாய்க்காலில் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலம் கட்டுதல் – நிர்வாக ஒப்பளிப்பு – வழங்குதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (என்.1) துறை

அரசாணை (நி) எண்.150 நாள். 27.5.2010.

திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி 13

படிக்கப்பட்டது:–

தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை கடித எண். F/7575/பகுதி II/2010–11, நாள். 28.11.2009.

ஆணை:

மேலே படிக்கப்பட்ட நீர்வள ஆதாரத்துறை திட்ட உருவாக்கத் தலைமைப்பொறியாளரது கடிதத்தில், மேட்டூர் கால்வாய்த் திட்டம் 1955–56ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது என்றும்; இதில் மேட்டூர் மேற்குக் கரை கால்வாயின் மொத்த நீளம் 27 மைல் ஆகும் என்றும்; இதன் பகிர்மான கால்வாய் மற்றும் கிளை கால்வாய்களின் நீளம் 37 மைல்கள் ஆகும் என்றும்; இதன் மூலம் சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 18000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது என்றும்; மேட்டூர் கிழக்குக்கரை கால்வாயின் நீளம் 40 மைல் 7 பர்லாங் ஆகும் என்றும்; இதன் மூலம் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் சுமார் 27780 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றது என்றும்; வெள்ளக் காலங்களில், பொது மக்கள் மற்றும் வாகனங்கள் இக்கால்வாயை கடக்க ஏதுவாக பொதுமக்களின் வேண்டுகோளின் அடிப்படையில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் மேட்டூர் கிழக்குக் கரை கால்வாய் மைல் 34/5–ல் பாலம் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது என்றும்; இத்திட்டத்தினால் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம், குமாரபாளையம் அக்ரஹாரம் கிராம பொதுமக்கள் பயன்பெறுவர் என்றும்; இத்திட்டத்திற்கு நில ஆர்ஜிதம் ஏதுமில்லை என்றும்; இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை 2010–2011ஆம் ஆண்டில் ரூபாய் 5.00 இலட்சங்களாகும் என்றும்; இத்திட்டம் திருச்சி மண்டல தலைமைப்பொறியாளர் அவர்களால் செயலாக்கப்படும் என்றும்; எனவே இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது என்றும் தெரிவித்து இந்த பாலத்தைக் கட்டுவதற்கு ரூ.5 இலட்சத்திற்கான (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்பளிப்பு வழங்கும்படி கேட்டுள்ளார்.

2. மேற்கண்ட திட்டத்தினை 2010–11ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழுவால் (Standing Finance Committee) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மேட்டூர் அணையின் கிழக்குக் கரை கால்வாய் மைல் 34/5ல் கிளை வாய்க்காலில் சிறுபாலம் கட்டுவதற்கு ரூ.5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)–க்கு, 2010–11ஆம் ஆண்டு பகுதி II திட்டங்கள் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம் தொடர்பாக சில்லரைச் செலவினங்கள், சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகியவற்றினை, மொத்தத் தொகையில் 2.5% க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

3. மேற்காணும் செலவினத்தினை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:–

"4702–00 – சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு
101 மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்
II மாநில திட்டம் – JA சிறுபாசன சிறப்புத் திட்டம் –
16 பெரும் பணிகள் (த.தொ.கு. 4702–00–101 JA 1607)"

4. மேற்காணும் திட்டத்தினை விரைவாக செயல்படுத்தி, பணி முன்னேற்றம் குறித்த அறிக்கையினை அவ்வப்போது அரசுக்கு அனுப்பி வைக்கும்படியும், இப்பணியினை, ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைக்குள் செய்து முடிக்க வேண்டும் என்றும் தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.25180/பொ.ப.II/2010 நாள் 17.5.2010 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப்பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை–5.
தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, திருச்சி மண்டலம், திருச்சி–20.
கருவூல அலுவலர், திருச்சி.
மாநிலக் கணக்காயர், சென்னை 18
நகல்
முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
நிதி (பொ.ப.II/வ.செ.பொ.II)த்துறை, சென்னை–9.
பொதுப்பணித்(ISpl 1)துறை, சென்னை–9.
SC/SF.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்